அ.வ.எண்: 22/2018 நாள்: 23.03.2026

வா.சா.2 – கணேசன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>1,2,4,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தேவகோட்டையில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால், சுமார் 15 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால், கருப்பகுடி கிராமத்தில் விவசாய வேலை செய்து வருகிறேன், குழந்தைகளை படிக்க வைப்பதற்காக தேவகோட்டையில் உள்ளேன். நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வரவில்லை. 1ம் வாதிக்கு பூர்வீக சொத்துக்கள் நிறைய உள்ளது என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு அளவிற்கு அவருக்கு பூர்விக இடங்கள் உள்ளது என்றால், சுமார் 10 ஏக்கருக்குள் பூர்விக இடங்கள் உள்ளது. மேற்படி பூர்வீக சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டு விட்டதா என்றால் அவர்கள் பிரித்துக் கொண்டார்கள். யார் யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் பிரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. மேற்படி பாகம் பிரிக்கப்பட்டது பதிவு செய்யப்பட்டதா என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. தாவாசொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக தாவாசொத்தில் வீடு கட்டி இருந்தார்கள். அதில் வீராசாமி மற்றும் பொன்னரியாள் அவர்கள் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார்கள். மேற்படி வீடு வீராசாமிக்கு எவ்வாறு கிடைத்தது என்றால், அது அவருக்கு பூர்வீக வீடு ஆகும். மேற்படி வீட்டில் விஸ்தீரணம் என்ன என்றால் வீராசாமி இறந்த பிறகு பொன்னரியாள் கட்டிய வீட்டின் அளவு சுமார் 1 1/2 சென்ட் ஆகும். பூர்விக வீட்டின் விஸ்தீரணம் என்னவாக இருந்தது என்றால் சுமார் 3 சென்ட் ஆக இருந்தது. மேற்படி வீராச்சாமி உடன் பிறந்தவர்கள் பூர்வீக வீட்டில் ஒன்றாக குடியிருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவாசொத்தில் உள்ள வீடு நிரந்தரமாக அவர்களுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எனது ஆதார் அட்டையில் என்ன விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தேவகோட்டை விலாசம் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கருப்பகுடி கிராமத்தில் வசித்து வருவதற்கான ஆதாரங்கள் என்ன உள்ளது என்றால், வீட்டு வரி ரசீதுகள் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் உள்ள வீடு கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் பழைய வீடு கட்டி சுமார் 40 ஆண்டுகள் இருக்கும், அதன் பின்பு வீராசாமி இறந்த பிறகு தான் புது வீடு கட்டப்பட்டது. மேற்படி விபரங்கள்

எனக்கு எப்படி தெரியும் என்றால், நான் அந்த வீட்டின் வழியாகத்தான் என் ஊருக்கு சென்று வருவதால் அது பற்றிய விபரங்கள் எனக்கு தெரியும். வீராச்சாமி உடன் பிறந்தவர்கள் தாவாசொத்திற்கு அருகில் வசித்து வருகிறார்களா என்றால், அவர்கள் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வருகிறார்கள். தாவா சொத்தில் இருந்து அவர்கள் கட்டியுள்ள வீடு எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 10 அடி தொலைவில் உள்ளது.

4. வீராசாமி உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 4 நபர்கள். அவர்களின் பெயர் தெரியுமா என்றால், மூத்தவர் பெயர் சரியாக தெரியவில்லை சாமி என்று அழைப்பார்கள், இரண்டாவதாக வீராசாமி, மூன்றாவதாக வீரசிங்கம் மற்றும் நான்காவதாக போஸ் ஆகியோர் ஆவர். மேற்படி நபர்கள் பூர்வீக சொத்தில் தான் உள்ளார்களா என்றால் சரிதான். தாவா சொத்து என்ன வகைப்பாடு என்றால் நத்தம் இடமாகும். நத்தம் இடங்களுக்கு எப்பொழுது பட்டா வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு பட்டா எண், சர்வே எண் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் பொன்னரியாள் பெயரில் உள்ளது. எனக்கு வழக்கு பற்றிய விபரங்கள் தெரியாது என்றும், வாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னாள் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. தாவாசொத்திற்கு பழைய பட்டா யார் பெயரில்

உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.23 16:09:25 +0530